# தந்தையர் தினம்!

தந்தையர் தினமென்று தகைவுடனே சொல்லி வைத்தார்!
எந்தையின் நினைவென்னுள் எழுந்து நடந்திடவே மனம்;
அந்தநாள் நினைவுகளில் அசைந்து நிறைந்தது காண்!
எந்தைபோல் எவருண்டு எங்கு காண்பேன் இனி? அன்பில்,

ஆன்றநல் அறிவில் என்னைச் செதுக்கிய இயன்நிலை தோழன்!
தோன்றும் கேள்விக்கு தொய்வின்றி பதில் கிடைக்கும் என்றும்!
ஆன்ற வள்ளுவனின் பிறப்போக்கும் என்பதை விதைத்த மகான்!
மாண்புடை தந்தையர் தாம் யாவருமே மகிழ்வுடனே வாழ்த்து!

- கு.ப. அசோகன் 15-06-2022